இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17-09-2024

# முன்னேற்றக் கழகம் முன்னேறிச் செல்க ! - 1

**75 ஆண்டுகள் ஒரு இயக்கம் இருப்பது சாதனைதான். அதனை விடச் சாதனை என்பது சாதனைகளுக்கு மேல் சாதனைகளைச் செய்தும், செய்து கொண்டும் இருப்பதுதான் மகத்தான சாதனையாகும்!**

வெறும் வாய்ச் சொல் வீரர்கள் என்று பழிக்கப்பட்டார்கள். சினிமாக்காரர்கள் என்று கிண்டலடிக்கப்பட்டார்கள். வெறும் கோபத்தால் உருவான கட்சி, அந்தக் கோபம் குறைந்ததும் கரைந்துவிடும். இவர்களால் எல்லாம் கட்சி நடத்த முடியுமா? - இப்படி எல்லாம் அந்தக் காலத்தில் ஆரூடங்கள் சொல்லப்பட்டன. அவை திராவிடக் கொள்கை பிடிக்காத நச்சரவங்களின் நசநசப்புகளாகவே அந்தக் காலத்தில் இருந்தன. ஆனாலும், பத்திரிக்கைகள் அவர்கள் கையில் இருந்ததால் விளம்பர வெளிச்சமே திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைக்க பல்லாண்டு ஆனது.

**'சி.என். அண்ணாதுரை பேசுகிறார்' என்று பரவினால், அது யார் காதுக்கெல்லாம் பாய்கிறதோ அவர்கள் அந்த மேடையை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள். ஆனால், பத்திரிக்கைகளில் பேரறிஞர் பேச்சு இடம்பெறாது. மீறி மனமிரங்கி போட்டால் கூட, 'அண்ணாதுரையும் பேசினார்' என்ற ஒற்றை வரியில் தட்டி விட்டுவிடுவார்கள். அண்ணாவின் தம்பிகளே தொண்டர்களாக மட்டுமல்ல, 'மீடியாக்களாகவும்' மாறினார்கள். எழுதத் தெரிந்த எல்லாத் தம்பிமார்களும் பத்திரிக்கைகள் தொடங்கினார்கள். எழுதினார்கள். மறைந்த பத்திரிக்கைகள் பத்துக்குள் இருக்கலாம். ஆனால் திராவிடம் பாடிய பத்திரிக்கைகள் 100 ஆனது. 200 ஆனது. ஒரு காலக்கட்டத்தில் 250க்கும் மேல் ஆனது.**

**கையில் வைத்து படிப்பதும், கக்கத்தில் வைத்துக் கொண்டு நடப்பதும், ஊரைக் கூட்டி வைத்து வாசிப்பதும் 'திராவிடப் பத்திரிக்கைகளாகவே' இருக்கும் என்ற நிலையை பேரறிஞர் அண்ணா உருவாக்கினார். பத்திரிக்கைகளையும், புத்தகங்களையும் தடை செய்தது அரசு. தடை செய்யப்பட்ட புத்தகங்களை - சிம்னி விளக்கு வெளிச்சத்தில் வாசித்தார். "தடை செய்யப்பட்ட ஆரிய மாயை ....... என்ற இடத்தில் பொதுமக்கள் முன்னால் வாசிக்கப்படுகிறது" என்று சொல்லி விட்டுச் செய்தார்கள். நாடகங்கள் போட்டார்கள். நாடகங்கள் தடை செய்யப்பட்டன. தடை செய்யப்பட்ட நாடகங்களே, வேறு பேரில் நடத்தப்பட்டன. கைது செய்யத் தொடங்கியது அரசு. கைதாக முன் வருவோர் எண்ணிக்கை அதிகம் ஆனது.**

தி.மு.க. வளர்ந்து வருகிறது என்பதை நாடு சொல்லவில்லை. சிறைகள் முதலில் சொன்னது. போராட்டம் ... போராட்டம்... போராட்டம்... எந்தக் கவலையும் இல்லாமல் மாதக் கணக்கில் சிறைகளை நோக்கி வந்து, வீட்டைப் போலக் கவலையில்லாமல் தங்கி ... பாட்டுப் பாடிக் கொண்டும்.. பட்டிமன்றம் நடத்திக் கொண்டும் இருக்க இவர்களால் முடிகிறது என்றால்... யார் இவர்கள் என்பதை அரசியல் களம் அப்போதுதான் முதன்முதலாக கண்ணைத் திறந்து பார்த்தது.

அவர்கள் பார்க்கும் போது திராவிட முன்னேற்றக் கழகம் பலமாக வளர்ந்து விட்டது. இவர்கள் யாரென்று பார்க்கும் போது அரசியல் களம் பார்க்கும் போது, வந்தது 1957 தேர்தல். முதல் அடியே 15 அடியாக எடுத்து வைத்தார் பேரறிஞர் அண்ணா. 'நான் குள்ளமாக இருக்கலாம். ஆனால் நான் நடத்தும் திராவிடப் புரட்சி குள்ளமானது அல்ல' என்றார் அந்த கிண்டலுக்குப் பேர் போன சிந்தனையாளன்.

**"நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள். இந்த சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திரக் கூட்டத்தினர் என்றால் எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர நிலைமைதான் என்பதை அனைவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள் தான் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன" என்று பேரறிஞர் சொன்னது பொட்டல் காட்டில் அல்ல, தமிழ்நாடு சட்டமன்றத்தில்தான் சொன்னார். உலகில் எந்தக் கட்சித் தலைவரும் இப்படிச் சொல்லி இருக்க மாட்டார்கள்.**

இயல்பில் அண்ணா, கொஞ்சம் பயந்தவர். 'நடக்குமா, நடக்காதா' என்ற தயக்கம் எப்போதும் தனக்கு உண்டு என்பதை அண்ணாவே சொல்லி இருக்கிறார். அத்தகைய அண்ணாவே 1967 ஆம் ஆண்டு நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம் என்பதை 1957 ஆம் ஆண்டே சொன்னார். பொதுக்கூட்டத்தில் அல்ல, தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே சொன்னார்.

4.7.1957 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் பேசுகிறார்...

**"நாங்கள் இந்த சபைக்கு வந்தது என்றைக்கும் எதிர் அங்கத்தினர்களாகவே இருப்பதற்காக நுழையவில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தான் போகிறோம். ஆகவே நாங்கள் பொறுப்பை உணர்ந்திருக்கிறோம்" என்று சொன்னார் அண்ணா. பத்து ஆண்டுகாலம் 'ஆட்சியைப்' பிடிக்க அவர் போராட்டம் நடத்தவில்லை. மக்களுக்காகப் போராடினார். கொள்கைக்காகப் போராடினார். இவர் கையில் நமது நலன் பாதுகாக்கப்படும் என்று மக்கள் நினைத்து ஆட்சியை அண்ணாவிடம் ஒப்படைத்தார்கள் 'மக்கள்'.**

– தொடரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.9.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்கள் சந்தித்து, அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்தமைக்காக வாழ்த்துத் தெரிவித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, எம்.பாபு, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

# எப்பக்கமும் இருவண்ணக் கொடிகள்...

முதல் பக்கத் தொடர்ச்சி

என்றழைத்திட எல்லா உரிமைகளையும் வரலாறு ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

### தி.மு.கழகத்தின் தோற்றமும், நோக்கமும் !

தென்னாட்டின் விடிவெள்ளியாகத் " திராவிட முன்னேற்றக் கழகம் " என்ற நம்முடைய அமைப்பு 17.9.1949 அன்று, சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத் தினின்றும் விடுதலை – ஆகிய இலட்சியங்களை முன்னிறுத்தி, சென்னை - இராயபுரம் இராபின்சன் பூங்காத் திடலில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வியத்தகு விளக்க உரையுடன் தொடங்கப்பட்டது.

1944-ஆம் ஆண்டு, சேலத்தில் நடைபெற்றது நீதிக் கட்சி மாநாடு. அதில், 'அண்ணாதுரை தீர்மானம்' எனத் தந்தை பெரியார் அவர்களாலேயே தலைப்பிடப்பட்ட அந்தத் தீர்மானத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், "தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ( Justice Party – நீதிக்கட்சி ) என்ற பெயரை மாற்றித் "திராவிடர் கழகம்" எனப் பெயரிடப்பட வேண்டும் என்று முன்மொழிந்த தீர்மானம், எவ்வித எதிர்ப்பும் இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பது நமது திராவிட இயக்க வரலாற்றின் முக்கியப் பொன்னேடு.

**நீதிக்கட்சியைத் திராவிடர் கழகம் என மாற்றியமைத்திட முனைந்த போது, பேரறிஞர் அண்ணா அவர்களின் மனதில் "இனவழிச் சிந்தனை ( Racial Outlook ) " பதிந்திருந்த சூழலில்; திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த போது, "நிலவழிச் சிந்தனையும் ( Geographical Outlook ), அரசியல் – பொருளாதாரவழிச் சிந்தனையும் ( Politico – Economic Outlook ) "மேலோங்கிப் பரிணாம வளர்ச்சி பெற்றது என வரலாற்றாசிரியர்கள் கருத்தறிவிக்கின்றனர்.**

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து புதிய கட்சியை உருவாக்கிய போது அதைத் ' திராவிடர் முன்னேற்றக் கழகம் ' என்றில்லாமல், 'திராவிட முன்னேற்றக் கழகம் ' எனப் பெயரிட்டதற்கான காரணத்தை விளக்குவதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள், "திராவிட மண்ணில், திராவிடர்கள் மட்டுமே வாழலாம் என்று வரையறை செய்வது குறுகிய நோக்கமாகும்; முடியாத செயலுமாகும். இந்த மண்ணுக்கு நன்றி உள்ளவர்களாக நடந்து கொள்ளும் எந்த இனத்தவரும் இன்னலின்றி இன்ப வாழ்வு வாழப் பணியாற்றுவதே நம் கட்சியின் இலட்சியமாக இருக்க வேண்டும். இங்கே திராவிடரும் வாழலாம், ஆரியரும் வாழலாம், கிறிஸ்துவரும் வாழலாம், முகமதியரும் வாழலாம் என்ற பரந்த நோக்கத்தோடு நாம் பணியாற்ற வேண்டும். அதே சமயம் நம் நாட்டுக்கே உரிய பண்பாட்டைக் காக்கவும், தொழில் வளத்தைப் பெருக்கவும் நாம் பின்வாங்கத் தேவையில்லை "என்று அன்றே கூறியிருப்பதின் ஆழமான அர்த்தத்தை - பவள விழா நிறைவு பெறும் இந்தக் கட்டத்திற்கும், இனிவரும் எந்தக் காலத்திற்கும் பொருத்தமுடைய பொருளைப் புரிந்து கொள்வது நமக்குத் தேவையானதாகும்.

**பிரிவினையை முற்றிலும் ஒருமித்த முடிவாகக் கைவிட்ட பிறகு, அந்த இலட்சியங்களை – அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில், இந்திய ஒற்றுமைக்கு சிறிதும் குந்தகம் ஏற்படாத வகையில், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி, அடைவதற்கு தி.மு.க. பின்னர் ஏற்றுக் கொண்ட மார்க்கம்தான் மாநில சுயாட்சி. இந்த சாரம் அடங்கிய அண்ணாவின் கடைசிக் கடிதம் 'அண்ணாவின் உயில்' எனக் கருதப்பட்டு வருகிறது.**

அண்ணா அமைத்தளித்த கருத்துகளின் அடிப்படையிலேயே, கலைஞர் நமக்கு ஐம்பெரும் முழக்கங்களை வழங்கினார்; அவற்றைப் பின்பற்றியே நமது திராவிட நாயகர் மு.க.ஸ்டாலினின் ஐம்பெரும் முழக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### தந்தை பெரியாரும், அண்ணாவும்; வாழையடி வாழையென !

தந்தை பெரியாரிடமிருந்து அண்ணாவையோ; பெரியார் - அண்ணாவிடமிருந்து கலைஞரையோ ; இந்த முப்பெரும் ஆளுமைகளிலிருந்து மு.க.ஸ்டாலினையோ பிரித்துப் பார்க்க முடியாது; பிரித்துப் பார்க்கவும் கூடாது. இவர்கள் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தார். ஒருவரிலிருந்து மற்றொருவர், அவரைச் சார்ந்தே இவர், இவருக்குள் அவர், அதே சாயல், அதே தோற்றம் – அதுதான் தி.மு.க.!

தந்தை பெரியாரை அண்ணா, தன்னுடைய பொது வாழ்வின் ஒரே தலைவர் என்றார். தந்தை பெரியார் மனமுவந்து, பெட்டிச் சாவியை, அண்ணாவிடம் கொடுத்தார். அந்த அளவுக்கு அண்ணா, பெரியாரின் ' சுவீகாரப் புத்திரராக,' 'பெரியாரின் குடும்பத்தில் பிறவாப் பிள்ளையாக 'த் திகழ்ந்தார்.

பெரியாரை, "சமூக சீர்திருத்தத் தலைவர் – உரிமைப் போராளி – போர் வீரர் – தமிழ் நாட்டின் முதல் பேராசிரியர் – ஒய்வறியாதவர் – புயல் வீசச் செய்த புரட்சியாளர் – பகுத்தறிவுப் புரட்சிக்குப் பாடுபட்டவர் – மானத்தை மீட்டுத் தந்த மகான் – பொதுத் தொண்டினை கலையாக மாற்றியவர் – மனச்சேற்றைத் துடைத்தெறிந்தவர் – தண்டனைக்கு அஞ்சாத தலைவர் – புதுவாழ்வு தந்த தந்தை – வற்றாத பகுத்தறிவின் காவலர் – இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய செயல்களை இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்கக் கிளம்பியவர் – ஒரு சமூகத்தை, ஒரு நாட்டு மக்களை ஆளாக்கிவிட்ட பெருமை உலகத்தின் பல தலைவர்களுக்குக் கிடைத்ததில்லை; பெரியார் அவர்களுக்குத்தான் அந்தத் தனிப் பெருமை சேர்ந்திருக்கிறது – "என்று மனமாரச் சொன்னார் அண்ணா.

**"பெரியார் நமக்கு மற்றவர்கள் சொல்லாதவை எல்லாம் சொன்னார்; மற்றவர்கள் யாரும் விளக்காததையெல்லாம் விளக்கினார்; நம்மை நாம் உணரவும், நமது மானத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார் " என்று, பெரியார் திராவிட சமுதாயத்திற்கு ஆற்றியிருக்கும் பங்கு பணியை அண்ணா எடுத்துரைத்துள்ளார்.**

அப்படிப்பட்ட பெரியாரின் பிறந்த நாளையும், பெரியாரைப் பொழிப்புரை செய்துணர்த்திய அண்ணாவின் பிறந்த நாளையும், தி.மு.க. எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தின் பவள விழா நிறைவையும் ஒன்றிணைத்து இன்று எடுக்கப்படுவதே முப்பெரும் விழா !

# சுயமரியாதையும், சுயராஜ்யமும் !



மனிதனுக்கு அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதுதான் பிறப்புரிமையே அல்லாமல், அரசியலான இராஜீயமென்னும் சுயராஜ்யம் ஒருக்காலும் பிறப்புரிமை ஆகமாட்டாது. இராஜீய பாரமானது ஒரு தொண்டு.

சுயமரியாதை கண்டவிடம்தான் சுயராஜ்யமே தவிர, சுயராஜ்யம் என்பது தனி வஸ்து இல்லை என்பதை உணர வேண்டும்.

ஆதலால், பிறப்புரிமை இன்னது என்பதும், அதற்கு ஏற்படுத்தப்படும் தடைகளிலிருந்து விலக இன்னின்னது செய்ய வேண்டும் என்பதும் , சுயராஜ்யம் என்பது இதுபோலவே மக்களை ஏமாற்றும் ஒரு புரட்டான மார்க்கம் என்பதும், 'சுயமரியாதை கண்டவிடத்தில் உண்மையான சுயராஜ்யம் என்பது துலங்கும் 'என்பதும் விளங்கியிருக்கும் என்று நினைக்கிறோம்.

**தந்தை பெரியார்**